# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 224/2022**

**Prosecution witness : அ.சா. 10 Date : 08.09.2023**

| | |
|---|---|
| **Name : சின்னப்பன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது நங்கவள்ளி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020-ம் வருடம் கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் நிலையப்பொறுப்பில் இருந்தபோது, மேட்டுர் அரசு மருத்துவமனையிலிருந்த கிடைக்கப்பெற்ற காயத்தகவலின் பேரில் அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த ராஜா த/பெ மாதையன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நிலையம் வந்து எழுத்துமூலமாக புகார்வாக்குமூலத்தின் தன்மைக்கு ஏற்ப கருமலைக்கூடல் காவல் நிலைய குற்றஎண்.459/2020 ச/பி 279, 337 இதச பிரிவில் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்.**

2) பின்னர் புகார்மனு மற்றும் அசல் முதல்தகவல் அறிக்கையை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தபட்ட அலுவலர்களுக்கு அனுப்பிவைத்தேன். புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

3) சம்பவம் 20.09.2020-ம் தேதியன்று காலை 9.30 மணிக்கு நடந்ததாக முதல்தகவல் அறிக்கையில் உள்ளது என்றால் சரிதான். அதேதேதியில் 12

மணிக்கு வாக்குமூலம் பெற்று முதல்தகவல் அறிக்கை பதியப்பட்டது என்றால் சரிதான். அன்றைய தேதியில் எத்தனை மணிக்கு காயத்தகவல் கிடைத்தது என்றால் காலை 10.30 மணிக்கு கிடைத்தது. நான் சுமார் ஒன்றரை மணிநேரத்தில் மருத்துவமனை சென்று, வாக்குமூலம் வாங்கி முதல் தகவல் அறிக்கை பதிய வாய்பே இல்லை என்றால் சரியல்ல.

4) 20.09.2020–ம் தேதி பதியப்பட்ட வாக்குமூலத்தில் எத்தனை மணிக்கு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கில் இறந்த சுரேஷ் என்பவரின் தந்தை காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். அவர் காவல் துறையில் பணிபுரிந்த காரணத்தால், நான் அவருக்காக வேண்டி, முதல்தகவல் அறிக்கை அவருக்கு சாதகமாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல், சொன்னநேரத்தில் வாக்குமூலம் பெறவில்லை என்றும், பின்னிட்டு முதல்தகவல் அறிக்கை பதியவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**மேட்டுர்.**